**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | Sessions Case No. 163 of 2019 |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution : PW- 4 |
| | | Defence : |
| | : | Court : |

| | |
|---|---|
| Name | : Dharman |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of June 2022.**

முதல் விசாரணை:

நான் கடத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு போக்குவரத்து கலகத்தில் ஓட்டுநராக பணி செய்கிறேன். அ.ச.1 என் மனைவி. அ.சா.2 என் மைத்துனன். அ.சா.3 என் மாமியார். என் மனைவி லேப் டெக்னிசியனாக தொழில் செய்து வருகிறார். அ.சா.2 பள்ளிப்பட்டில் தீயணைப்பு துறையில் ஓட்டுநராக பணி செய்து வருகிறார். என் மாமனார் இறந்துவிட்டார். என் மாமனாருக்கு பூர்வீகம் பெரியதள்ளப்பாடி கிரமமாகும். மேற்படி கிராமத்தில் என் மாமனாருக்கும் அவரது சகோதரருக்கும் பொதுவில் ஒரு வீடு இருந்தது. எதிரிகள் பிரசாந் மற்றும் பாரதிராஜா ஆகியோரை எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்திற்கு அவர்களை ஒருமுறை பார்த்துள்ளேன் (எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை அதனால் சாட்சியால் எதிரிகளை அடையாளம் கான முடியவில்லை). என் மாமனாரின் அத்தை பேரனின் திருமணத்திற்காக பெரியதள்ளப்பாடி கிராமத்திற்கு 2019ம் ஆண்டு ஒருநாள் சென்றிருந்தோம். தேதி மற்றும் மாதம் ஞாபகமில்லை. இரவு சுமார் 10.00 மணியளவில் திருமணத்திற்கு முதல் நாள் இரவு அனைவரும் மண்டபத்தில் சாப்பிட்டுவிட்டு திருமணப்பெண்ணை அழைப்பதற்காக கோவிலுக்கு அழைத்ததால் நான் அங்கு சென்றுவிட்டேன். நான் கோவிலில் இருந்தபோது என் மைத்துனரை அடித்துவிட்டதாக தகவல் தெரிந்து நான் மண்டபத்திற்கு வந்தேன். அ.சா.2 முடியாமல் ரத்த வெள்ளத்தில் இருந்தார். அதன் பிறகு ஆம்புலன்ஸ் வரவழைத்து ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். நான் என் மனைவி, என் மாமியார் மற்றும் என் மனைவியின் சகோதரி ஆகியோருடன் மருத்துவமனைக்கு வந்தோம். ஊத்தங்கரை மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து தருமபுரி மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். தருமபுரி மருத்துவமனையில் வண்டாம் என சொல்லிவிட்டதால் சேலம் மணிப்பால் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். மணிப்பால் மருத்துவமனையில் சுமார் 15 நாட்கள் என் மைத்துனர் சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

என் மாமனாருக்கு அரசால் ஒதுக்கப்பட்ட வீடு பெரியதள்ளப்பாடியில்உள்ளது என்றால் அந்த வீட்டில் எதிரிகள் பிரசாந் குடுப்மத்தினர் காலி செய்வதில் பிரச்சனை இருந்து வந்தது. அதன் காரணமாக என் மனைவியின் குடும்பத்தாரும், எதிரிகளின் குடும்பத்தாருக்கும் முன் விரோதம் இருந்து வந்தது. திருமண வீட்டில் நாங்கள் அனைவரும் சாப்பிட சென்று கொண்டிருந்தபோது எதிரி பாரதிராஜா மற்றும் பிரசாந் கையில் ஆளுக்கொரு சூரிக்கத்தியை வைத்துக்கொண்டு என் மைத்துன்ர பெருமாளை அசிங்கமான வார்தைகளால் திட்டிக்கொண்டே குத்த வந்தததாகவும் அவர்களிடமிருந்து தப்பித்து பெருமாள் 10 அடி தூரம் சென்றதும் கால் இடறி கீழே விழுந்துவிட்டார் என்று பின்னால் சென்று எதிரிகள் இருவரும் பெருமாளின் இரண்டு கைகளையும் ஆளுக்கொரு பக்கம் பிடித்து எங்களிடம் மோதுகிறாயா என்று பேசிகொண்டே எதிரி பிரசாந் கையிலிருந்த சூரிக்கத்தியால் பெருமாளின் வலது கண், வலது தோள்பட்டை, வலது முதுகு, இடது பக்கத்தலையில் குத்தி ரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும் எதிரி பாராதிராஜா அவர் கையிலிருந்த கத்தியால் இத்தோடு ஓலிந்து போ என்று சொல்லி இடது பக்க மார்பு, வலது வயிறு இடது வயிறு, நடு வயிறு, இடது தொடை ஆயி பகுதிகளில் குத்தி ரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும் சம்பவத்தை பார்த்த நானும் மற்றும் அங்கிருந்த உறவினர்களும் சத்தம் போடவே எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் சம்பவத்தை நேரில்

பார்த்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது

மறுவிசாரணை: இல்லை

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**